திரு. சி. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, 2001-2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழுவின் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை குறித்த 15-வது அறிக்கையினையும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் குறித்த 16-வது அறிக்கையினையும், சாலைகளும் பாலங்களும் குறித்த 17-வது அறிக்கையினையும் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-2003 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 149 முதல் 160 வரையிலான 12 அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

முற்பகல் 10-05

(இ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி.

திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-2003 ஆம் ஆண்டுகளுக்கான பொது நிறுவனங்கள் குழுவின் 105 முதல் 113 வரையிலான 9 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

5. மானியக் கோரிக்கைகள், 2003–2004, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 33 - நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2003-2004 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீதான விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 33 - நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.